செ.வெ.எண்:366/2009 நாள். 30.10.2009

**திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 12 கிராமங்களுக்கு ரூ.60 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்படும் - மாவட்ட கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுக் குழுவின் தலைவரும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.டி.ஆர்.பாலு அவர்கள் தகவல்.**

காஞ்சிபுரம் மாவட்ட அளவிலான கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுக் குழுவின் கூட்டம் இன்று (30.10.2009) காஞ்சிபுரம் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் குழுவின் தலைவரும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் மத்திய அரசின் தேசிய ஊரக வேலையுறுதித் திட்டம், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டம், தேசிய நில ஆவணங்களை நவீனப்படுத்தும் திட்டம், துரிதப்படுத்தப்பட்ட ஊரக குடிநீர் திட்டம், ஊரக சுகாதார திட்டம், தேசிய சமூக உதவித் திட்டம், இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் பிற ஓய்வூதியத் திட்டம், அனைவருக்கும் கல்வித் திட்டப் பணிகளின் செயலாக்கம் போன்ற பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்திற்கு பின், குழுவின் தலைவரும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.டி.ஆர்.பாலு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது, “திருப்பெரும்புதூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட தத்தனூர் ஊராட்சியை சேர்ந்த கல்மேட்டுக்காலனி, கொளத்தூர் ஊராட்சியை சேர்ந்த கொளத்தூர், கொளத்தூர் காலனி, நாவலூர், நாவலூர் காலனி, கே.கே.நகர், மோட்டூர், வெங்காடு ஊராட்சியைச் சேர்ந்த வெங்காடு, வெங்காடு காலனி. இரும்பேடு, இரும்பேடு காலனி, கருணாகரச்சேரி ஆகிய கிராமங்களில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சனையை தீர்க்க ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து பைப் லைன் மூலம் 12 கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனை மிக விரைவில் அதாவது டிசம்பர் மாதத்திற்குள் முடித்து குடிதண்ணீர் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளபடும். மேலும் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் குடிதண்ணீர் பிரச்சனைக்கு முன்னுரிமை அளித்து அதனை உடனடியாக நிறைவேற்றிடவும், சாலை வசதியில்லாத சுடுகாடுகளுக்கு சாலைகள் அமைத்து தந்திடவும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சம்மந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதியங்கள் வழங்கிட வேண்டி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு அவர்களிடமிருந்து மனுக்களை பெறும் போது ஒப்புகை (Acknowledgement) வழங்கிடவும், அவ்விண்ணப்பங்களை பரிந்துரை செய்யும் உள்ளாட்சி அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவ்விண்ணப்பங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதாவது ஏற்கப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்பது குறித்தும், நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை விளக்கியும் கடிதம் அனுப்பிட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து பள்ளிகளிலும் உள்ள கழிப்பறைகளுக்கு போதிய தண்ணீர் வசதி ஏற்பாடு செய்து வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகசிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேலும் துரிதப்படுத்த வேண்டும். ஒக்கியம் துரைப்பாக்கம், செம்மஞ்சேரி, கண்ணகி நகர் ஆகிய பகுதிகளில் நிலத்தடிநீர் பயன்படுத்த இயலாத நிலையில் உலோகத்தன்மையுடன் உள்ளது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித்தலைவர், உள்ளாட்சி அமைப்பின் தலைவர்கள் ஆகியோர் இணைந்து இப்பகுதி மக்களின் குடிதண்ணீர் பிரச்சனையைத் தீர்க்க திட்டம் தயாரிக்க உள்ளார்கள். நிலத்தடி நீரின் உலோகத்தன்மையை குறைத்து Reverse Osmosis System தொழிற்நுட்பத்தின் மூலம் சுத்தம் செய்து பயன்படுத்த சுமார் ரூ.25 இலட்சம் வரை செலவாகும். தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணிகளின் குறைபாடுகள் குறித்து பொதுமக்கள் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 1299 என்ற கட்டணம் இல்லா தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு குறைகளைத் தெரிவிக்கலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.சுந்தர், திரு.எஸ்.ஆர்.இராஜா, திருமதி.டி.யசோதா, டாக்டர்.காயத்ரி தேவி, திரு.து.மூர்த்தி, திருமதி.சங்கரிநாராயணன், திருமதி.சக்தி பெ.கமலாம்பாள், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.இரா.ஆனந்தகுமார்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.த.துரைசாமி, அனைத்து ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள், நகரமன்றத் தலைவர்கள், பேரூராட்சித்தலைவர்கள் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்